No. C-02/2026 27.01.2026

# பாலர் சபை நாள் 08.02.2026
# ஆயரின் சுற்றுமடல்

அன்பு அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே, சிறாரின் வாழ்வில் நம்பிக்கையை விதைக்கும் பெற்றோர்களே, வழிகாட்டிகளே, சகோதர சகோதரிகளே, குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் கொண்டாடவிருக்கும் பாலர்சபை நாள் நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'உதவும் கரங்கள் – நம்பிக்கையின் இதயங்கள்' என்னும் கருப்பொருளோடு பாலர் சபை நாள் 2026–ஐ நாம் கொண்டாடுகின்றோம். இன்றைய உலகில் உதவும் கரங்களால் அன்பை வெளிப்படுத்தவும், நம்பிக்கையின் இதயங்களால் உலகிற்கு ஒளியாக விளங்கவும் சிறார் செய்ய வேண்டிய அழகிய திருத்தூதுப்பணியையும் இது நமக்கு நினைவுறுத்துகிறது.

"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில், விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (மத் 19:14) என்ற ஆண்டவரின் வார்த்தைகள், திருஅவையின் இதயத்தில் குழந்தைகள் எவ்வளவு உயர்ந்த இடம் பெற்றவர்கள் என்பதை நமக்கு மீண்டும் நினைவூட்டுகின்றன. குழந்தைகள் இன்று மட்டுமல்ல, நாளைய திருஅவையின் நம்பிக்கையும் உயிருமாக இருக்கின்றனர்.

திருத்தந்தையின் நேரடிக் கண்காணிப்பில் செயல்படுகின்ற திருத்தூது சபைகளுள் ஒன்றாகப் பாலர்சபை விளங்குகிறது. உலகளாவியத் திருஅவை ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையைப் பாலர்சபை நாளாகக் கொண்டாடி, குழந்தைகள் வழியாக குழந்தைகளுக்கான திருத்தூதுப் பணியை வலுப்படுத்துகிறது. பாலர்சபை 1843ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆயர் சார்லஸ் டி ஃபோர்பின் ஜான்சன் அவர்களால், பவுலின் ஜாரிகாட் அவர்களின் துணையுடன் தொடங்கப்பட்டது. "குழந்தைகள் குழந்தைகளுக்கு உதவுதல்" என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, இன்று இது 120க்கும் மேற்பட்ட நாடுகளில் குழந்தைகளை செபிக்கவும், பிற குழந்தைகளின் தேவைகளை, வேதனைகளை உணர்ந்து உதவவும் அழைக்கிறது.

இன்றைய உலகில் நாம் பார்க்கும் சிறாரின் நிலைமை நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. மருத்துவமனைகளில் வலியுடன் போராடும் சிறார், தெருக்களில் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் சிறார், அனாதை இல்லங்களில் அன்புக்காக ஏங்கும் பிள்ளைகள், போர், இடம்பெயர்வு, அகதிகளாக வாழ்விடங்களை விட்டு வாழ்விற்கான போராடும் துயரம், குடும்பச் சிதைவு போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட சிறார் – இவர்கள் அனைவரும் நம் கண்களுக்கும் இதயத்துக்கும் முன் நிற்கின்றனர். இத்தகைய வாழ்வுண்மைகளை உணரச் செய்வதும், அவற்றில் ஈடுபடும் மனநிலையைச் சிறாருக்குள் வளர்ப்பதும், விளையாட்டுகளுக்கும் வெளிப்புறச் செயல்பாடுகளுக்கும் மேலான ஒரு முக்கியமான பாலர்சபை பயிற்சியாக இருக்க வேண்டும்.

இந்த அழைப்பை மேலும் ஆழப்படுத்தும் வகையில், திருத்தந்தை லியோ வழங்கிய “ஏழையர்க்கான அன்பு” (2025) பற்றிய ‘நான் உன்மீது அன்பு செலுத்திவருகிறேன்’ என்னும் திருத்தூது ஊக்கவுரை அழுத்தமான சவாலை நம் முன் வைக்கிறது. இது துன்புறும் சிறாரையும், எல்லாவிதமான ஏழைகளையும், நாம் கடவுளின் தனிப்பட்ட அன்புக்குரியவர்களாகக் காண அழைக்கிறது. அவர்களின் வேதனை நம் வேதனையாகவும், அவர்களின் கண்ணீர் நம் பொறுப்பாகவும் மாற வேண்டுமென்று என்று நம்மைத் தூண்டுகிறது.

இந்த ஆன்மீக ஒளியில், நம் மறைமாவட்டத்தின் பாலர்சபை, சிறார் இயக்க குழந்தைகள் தங்கள் பங்குகளில் நடைமுறை அன்புச் செயல்களில் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டும். நோயாளிகளைச் சந்தித்து உதவுதல், முதியவர்களை பராமரித்தல், அனாதை இல்லங்கள், அகதி முகாம்கள், ஆதரவற்ற இல்லங்களுக்குச் சென்று அவர்களோடு நேரம் செலவிட்டு அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுதல், ஏழைக் குடும்பங்களுக்கு உதவுதல் போன்ற செயல்கள் சிறாரின் நம்பிக்கையை தங்கள் செயல்கள் மூலம் மாற்றும் வாழ்வுச் சாட்சிகளாக அமையும். இதற்குப் பெற்றோரும், வழிகாட்டிகளும், அருட்பணியாளர்களும் துறவறத்தாரும் தங்கள் வாழ்வு மூலம் முன்மாதிரியாக இருந்து, சிறாரைச் சரியான பாதையில் வழிநடத்த அழைக்கப்படுகின்றனர்.

மேலும், பெப்ரவரி 8ஆம் தேதியன்று நாம் கொண்டாடும் ஞாயிறு திருப்பலியில், பாலர்சபை நாளையொட்டி சேகரிக்கப்படும் காணிக்கைகளை, உலகம் முழுவதும் துன்புறும் குழந்தைகளுக்காகச் செயல்படும் திருத்தந்தையின் திருத்தூதுச் சங்கங்களுக்கு மனமுவந்து வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் சிறு தியாகங்கள் கூட, பல சிறாரின் வாழ்வில் நம்பிக்கையின் ஒளியாக மாறும்.

அன்பு சகோதரர் சகோதரிகளே,

‘உதவும் கரங்கள் – நம்பிக்கையின் இதயங்கள்’ என்ற இந்த ஆண்டின் கருப்பொருள், குழந்தைகளையும் பெரியவர்களையும் ஒரே நேரத்தில் மாற்ற அழைக்கிறது. குழந்தைகளின் கரங்களில் உதவி வளரட்டும்.

அவர்களின் இதயங்களில் நம்பிக்கை வேரூன்றட்டும். அந்த நம்பிக்கையின் வழியாக, நம் திருஅவையும் சமூகமும் புதுப்பிக்கப்படட்டும்.

அன்னை மரியாவின் பரிந்துரையாலும், சிறாரை அன்பால் அரவணைத்த இயேசுவின் அருளாலும், நம் சிறார் அனைவரும் கிறிஸ்துவின் அன்பில் வளர்ந்து, உலகிற்கு ஒளியாக மாறுவார்களாக.

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

(கோட்டாறு மறைமாவட்டம்)

---

**குறிப்பு** : இச்சுற்றுமடல் 01.02.2026, ஞாயிறு திருப்பலியில் நமது மறைமாவட்ட ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.